# அனல்மூட்டும்
# பிரசங்க குறிப்புகள்



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர் M.A.,D.D.,

# அனல் மூட்டும்
# பிரசங்க குறிப்புகள்

ஆசிரியர்
திருமறை அறிஞர்
**டாக்டர் அ. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
**நேரு வீதி, சூரம்பட்டி,**
**ஈரோடு – 9. தென்இந்தியா.**

| | | |
|---|---|---|
| RE- EDITION | - | MARCH 2017 |
| TOTAL COPIES | - | 1000 |
| COPY RIGHT | - | TO AUTHOR |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T 44 |

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SURAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**
**Bank A/C : C. ALEX DHINAKARAN**
**Bank of India (Erode Branch)**
**A/C No : 820210100005638**

## முன்னதாக சில வரிகள்

அன்பு வாசகர்களே!

இரட்சகரின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள். இளம் ஊழியர்களும், வேதாகம மாணவர்களும் குழுத் தலைவர்களும், தைரியமாகவும், கோர்வையாகவும், தெளிவாகவும் பிரசங்கிக்க வேண்டுமென்ற சீரிய எண்ணத்தில் இஃதனை தொகுத்து வெளியிடுகிறேன்.

வேதம் என்னும் சுரங்கத்தில் நுழைந்து வைரங்களை வெட்டி எடுத்து இந்த புத்தகத்தில் ஐம்பத்தைந்து இடங்களில் கொட்டி வைத்துள்ளேன்.

இதை அப்படியே எடுத்து மற்றவர்களுக்கு முன்பாக வைத்து விடாதீர்கள். அதினால் ஒரு பலனும் கிட்டாது. ஆகையால் ஜெபம்–தியானம் என்ற ஆயுதங்களை பயன்படுத்தி இந்த கற்களை பட்டைத் தீட்டுங்கள். அப்போது உங்கள் பிரசங்கம் ஜொலிக்கும், நீங்கள் ஜொலிப்பீர்கள், உங்கள் பிரசங்கத்தை கேட்போர் ஜொலிப்பார்கள்.

அன்பு வாசகர்களே! அவசரத்தில் இக்குறிப்புகளை பயன்படுத்தாதீர்கள். இக்குறிப்புகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு, தியானித்து, அனல்மூட்டும்படி பிரசங்கியுங்கள்.

இத்தொகுப்பில் உள்ள அதிகமான செய்திகள் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து நான் பெற்றுக் கொண்டவை, சில செய்திகள் பரிசுத்தவான்கள் மூலம் நான் கற்றுக் கொண்டவைகள். நான் இந்த புத்தகத்தின் தொகுப்பாசிரியர் மாத்திரமே, பரிசுத்த ஆவியானவரே இதன் ஆசிரியர்.

நீங்கள் அனல்மூட்டும் பிரசங்கியாக மாற வாழ்த்துகிறேன். அபிஷேக நாதர் உங்களை அக்கினியால் நிரப்புவாராக.

அன்போடும்
ஜெபத்தோடும்
அவர் சேவையில்
**அ. கிறிஸ்டோபர்.**



## அனல் மூட்டும் தீவட்டிகள்.....


1. நாவு
2. யோவான்ஸ்நானன்
3. ஆவியிலே
4. சகோதரர்கள் ஒருமித்த வாசம்
5. ஞானவான்களாய் நடந்து கொள்ளுதல்
6. கேட்டின் மகனாகிய யூதாஸ்
7. ஆரம்பக் கிறிஸ்துமஸ்
8. திரும்ப உங்கள் ஸ்தானத்தில் நிறுத்துவார்
9. வருகைக்கு அடையாளங்கள்
10. ஊழியன் எப்படி இருக்க வேண்டும்?
11. உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்
12. அப்போஸ்தலனாகிய அந்திரேயா
13. கிருபையினால் முடிசூட்டுகிறார்
14. கிருபையோடு வருபவைகள்
15. இனி சாபமிராது
16. நான் உன்னை உயர்த்துவேன்
17. கர்த்தரின் கரம்
18. நான் உன்னோடே இருந்து!
19. நீர் என்னை ஆசீர்வதியும்!
20. யேகொவா மெக்காதிஸ்!
21. கர்த்தாவே! உமது வலது கரம்

22. இவ்விதமாய் அற்புதம்!
23. ஸ்தோத்திர பலியிட்டால்...!
24. பட்சியைப் போல் காப்பார்
25. ஊழியருக்கு எதிராக வருபவை
26. நீங்கள் இராஜரீக ஆசாரியர்கள்
27. யோசுவாவை எதிர்க்க ஒருமனப்பட்டவர்கள்
28. பிரியமான பிலேமோன்
29. ஓடிப்போன ஒநேசிமு
30. வாருங்கள்! வாருங்கள்!!
31. கிருபை! கிருபை!!
32. இதோ நுகங்கள் முறிகிறது
33. 91ஆம் சங்கீதத்தில்
34. என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்
35. சிலநேரங்களில் இதுவும் தேவை தான்
36. உயிர்த்தெழுந்த இயேசு தந்தது
37. கர்த்தரை கண்ட அன்னாள்
38. கிழக்கு திசை சாஸ்திரிகள்
39. சர்வ வல்லவர்
40. பிரியமான காயுவே
41. நமக்கு எட்டாத பெரிய காரியங்கள்
42. சீ(ே)மோன் பேதுரு
43. ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே?



44. முத்தான முதலாம் சங்கீதம்
45. கர்த்தர் நமக்கு கேடகமானவர்
46. கர்த்தரில் பெலன் கொள்ளுங்கள்
47. நீதியின் பலிகளைச் செலுத்துங்கள்
48. ஆவியானவர் என்ன செய்கிறார்?
49. கண்ணி தெறித்தது!!
50. உன் ஊழியத்தை நிறைவேற்று
51. அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா?
52. ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்
53. கண்களை திறக்கிறவர்
54. கர்த்தரை கண்ட மனோவா
55. தேவன் நமக்கு அடைக்கலமானவர்
56. சிலுவையை சுற்றி நின்றவர்கள்
57. கோலியாத்தை ஜெயிப்போம்!
58. 133ஆம் சங்கீதம்
59. யார்? யார்? எது? எது?
60. ஆறுதலின் மகனாகிய பர்னபா.

# 1. நாவு

(சங்கீதம் 45 : 1)

**பலவிதமான நாவுகள்**

1. சங். 37 : 30 (நீதியானதை பேசும்)
   நீதிமானுடைய நாவு.
2. நீதி 12 : 18 (ஞானமுள்ளவைகளை பேசும்)
   ஞானமுள்ள நாவு.
3. நீதி 15 : 4 (ஆரோக்கியமான உபதேசத்தை பேசும்)
   ஆரோக்கியமுள்ள நாவு.
4. நீதி 25 : 15 (மென்மையான உத்தரவு சொல்லும்)
   இனிய நாவு.
5. ஏசா 50 : 4 (அறிவாக பேசும்)
   கல்விமானின் நாவு.

**குறிப்புகள்**

நாவு = நெருப்பு (யாக் 3 : 6)

நாவு = சுக்கான் (யாக் 3 : 4)

நாவு = அநீதி நிறைந்த உலகம் (யாக் 3 : 6)

ஆனால் நீதிமானுடைய நாவோ ஔஷதம்

**குறிப்புகள்**



# 2. யோவான் ஸ்நானன்

(மத் 11 : 11, லூாக் 7 : 28)

a. தேவனால் அனுப்பப்பட்டவன் (யோவா 1 : 6)

b. உன்னதமானவருடைய தீர்க்கதரிசி (லூாக்கா 1 : 76)

c. ஆவியிலே பெலன் கொண்டவன் (லூாக்கா 1 : 80)

**இவரின் சிறப்புகள் :**

1. அடையாளம் காட்டினவன் (யோவான் 1 : 29)

   இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. இயேசுவை மக்களுக்குக் காட்டினான்.

2. அஸ்திபார உபதேசத்தை நாட்டினவன் (மாற்கு 1 : 4)

   அஸ்திபார உபதேசமாகிய பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானத்தை அறிமுகம் செய்து அரங்கேற்றியவர்

3. அடக்கமுள்ளவன்

   தன்னை தாழ்த்தினவன் (யோவான் 1 : 27)

   a. நான் கிறிஸ்துவல்ல
   b. நான் வார்த்தையல்ல, சத்தம்
   c. அவர் பெருக நான் சிறுக
   d. அவர் என்னிலும் பெரியவர்
   e. அவர் பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கு தகுதியல்ல

4. ஆலோசனை சொல்லுகிறவன். (லூாக்கா 3 : 11–14)

   தன்னிடம் வருகிறவர்களுக்கு தகுந்த ஆலோசனை கொடுத்தான். a) பொதுமக்களே இரண்டு அங்கி இருந்தால் ஒன்றை மற்றொருவனுக்கு கொடு b) ஆயக்காரரே அதிகமாக வசூல் செய்யாதீர்கள் c) அரசு

அதிகாரிகளே! உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள்

5. அதிகாரத்தோடே கடிந்து கொள்ளுகிறவன். (மத் 14 : 4) ஏரோதை முகமுகமாய் தன் சகோதரனின் மனைவியை வைத்துக்கொண்டிருப்பது தவறு என்று கண்டித்தான்.

# 3. ஆவியிலே....

(அப். 1 : 8)

**ஆவியினாலே நாம் செய்ய வேண்டியவைகள்:**

1. பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி (எபே 6 : 18)
2. ஆவியிலே ஆராதித்தல் (பிலிப் 3 : 3)
3. ஆவியிலே சந்தோஷமாயிருத்தல் (1 தெச 1 : 6)
4. ஆவியிலே சரீரத்தின் கிரியைகளை அழித்தல் (ரோமர் 8 : 13)

**குறிப்பு :**

இல்லாத போதும் நாம் ஆவியில் சந்தோஷமாய் இருந்தால் சாத்தான் வெட்கப்பட்டுப் போவான்.

**குறிப்புகள்**



# 4. சகோதரர்கள் ஒருமித்த வாசம்

(சங். 133)

**இதனால் வரும் காரியங்கள் :**

1. நன்மை (Gain)

2. இன்பம் (Pleasant)

3. தைலம் (பரிசுத்தம்–Holyness) (யாத் 30 : 32)

   ஆசாரியன் மேல் ஊற்றப்படுகிற தைலம் பரிசுத்தத்திற்கு அடையாளமாய் இருக்கிறது.

4. பனி (செழுமை–Prosperity)

   மகா வறட்சியான காலத்திலேயும் எர்மோன், சீயோன் மலை மீது இரவில் பனிபெய்வதால் மழை பெய்தது போல் ஈரமாக இருக்கும்.

5. ஆசீர்வாதம் (Fullness)

6. ஜீவன் (Life)

**குறிப்புகள்**

# 5. ஞானவான்களாய் நடந்து கொள்ளுதல்!

(எபே 5 : 15)

எபேசு சபைக்கு பவுல் எழுதுகிறபொழுது, பரிசுத்தவான்களே, ஞானமற்றவர்களைப் போல் நடக்காமல் (முட்டாள்களைப்போல்) ஞானவான்களைப்போல் நடக்க வேண்டும் என்கிறார்.

**ஞானவான்களாய் நடக்க நமக்கு தேவையான 5 காரியங்கள் :**

**1. ஞானபோஜனத்தை** புசிக்க வேண்டும். (I கொரி 10:2)

ஞானபோஜனம் = மன்னா

பழைய ஏற்பாட்டில் மன்னா வானத்திலிருந்து இறங்கியது. புதிய ஏற்பாட்டில் நாம் புசிக்கவேண்டிய ஞானபோஜனம் என்னவென்று தெரியுமா? பிதாவின் சித்தம். (யோவான் 4 : 34)

**2. ஞானபானம்** குடிக்க வேண்டும்.

(பரிசுத்தாவியின் நிறைவு) (I கொரி 10 : 2)

3. **ஞானவரங்களைப்** பெற்றுக்கொள்ள வேண்டும்.

(I கொரி 14 : 1)

4. **ஞான இருதயம்** வேண்டும் யாத் 36:2, யாத் 35 : 25

தேவனுடைய சித்தத்தையும் திட்டத்தையும் புரிந்து கொள்ளத்தக்க விவேகமுள்ள இருதயம் நமக்கு வேண்டும்.

**5. ஞானபாடல்கள்** (எபே. 5 : 19)

எப்பொழுதும் ஆவிக்குரிய பாடல்களைப் பாடி ஆவியில் சந்தோஷமாயிருக்க வேண்டும்.



# 6. கேட்டின் மகனாகிய யூதாஸ்!

**குறிப்பு :**

a. நீண்ட நேர ஜெபத்திற்கு பிறகு இயேசுவே இவனை அப்போஸ்தலனாக தேர்ந்தெடுத்தார்.

b. மற்ற அப்போஸ்தலர்களைப் போல் பிசாசுகளைத் துரத்த வரம் பெற்றிருந்தான்.

c. நம்பிக்கைக்குரியவனாகி பணப்பையை வைத்திருந்தான். ஆனாலும் ஆகாதவன் ஆனான். அது ஏன்? ஏன்?

**காரணங்கள் :**

1. திருடன் (யோவான் 12 : 6)
2. தீய எண்ணம் உள்ளவன். (மத் 26 : 15) (பொருளாசை)
3. கடின இருதயமுள்ளவன் (மத் 26 : 25)

   கர்த்தர் அன்பாக பேசியும், மனந்திரும்பவில்லை.
4. தீய வார்த்தை (மத் 26 : 48)

   'அவர்' என்று சொல்வதற்குப் பதிலாக 'அவன்' என்று தரக்குறைவாக பேசினான்.
5. மாய்மாலமான வாழ்க்கை (மத் 26 : 49)

   காட்டியும் கொடுத்தான், கட்டியும் பிடித்தான்.
6. சாத்தான் அவனுக்குள் புகுந்தான். (லூக்கா 22 : 3)

**குறிப்புகள்**

# 7. ஆரம்ப கிறிஸ்துமஸ்

(லூக்கா 2 : 11)

1. லூக்கா 2 : 19 – மரியாள் சிந்தனை பண்ணினாள்.

   (கிறிஸ்துமஸ் அன்று கிருபைகளை சிந்திப்போம்)

2. லூக்கா 2 : 17 – மேய்ப்பர்கள் பிரசித்தம் பண்ணினார்கள்.

   (கிறிஸ்துமஸ் அன்று கிறிஸ்துவை பிரசங்கம் பண்ணுவோம்)

3. மத்தேயு 2 : 12 – சாஸ்திரிகள் வேறு வழியாய் திரும்பினார்கள்.

   (கிறிஸ்துமஸ் அன்று நமது வழிகளை விட்டு தேவ வழியில் நடப்போம்)

# 8. திரும்ப உங்கள் ஸ்தானத்தில் நிறுத்துவார்!

(II நாளா 33 : 13–16)

**மனாசே செய்த ஐந்து காரியங்கள் :**

1. II நாளா 33 : 15 – விக்கிரகங்களை எடுத்துப்போட்டான்.
2. II நாளா 33 : 15 – தான் கட்டின பலிபீடங்களை எடுத்தான்.
3. II நாளா 33 : 16 – கர்த்தரின் பலிபீடத்தை செப்பனிட்டான்.
4. II நாளா 33 : 16 – காணிக்கை செலுத்தினான்.
5. II நாளா 33 : 16 – ஜனங்களுக்கு எடுத்துரைத்தான்.



# 9. வருகைக்கு அடையாளங்கள்!

(மத்தேயு 24 : 3)

1. அறிவு பெருகிப்போகும் (தானி 12 : 4)
2. வேகமான வாகனங்கள் (நாகூம் 2 : 4)
3. வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் (மத் 24 : 29)
4. சுவிசேஷம் எங்கும் அறிவிக்கப்படும் (மத் 24 : 14)
5. அத்திமரம் (இஸ்ரவேல்) துளிர்விடும் (மத். 24 : 32)

# 10. ஊழியன் எப்படி இருக்க வேண்டும்?

(எபே. 3 : 7)

1. எபி 5 : 4 – அழைக்கப்பட்டவனாய் இருக்க வேண்டும்
2. யாத் 32 : 26 – பிரதிஷ்டை உள்ளவனாய் இருக்க வேண்டும்
3. உபா 18 : 1 – சுதந்திரமில்லாதவனாய் இருக்க வேண்டும்
4. லேவி 8 : 12 – அபிஷேகம் பண்ணப்பட்டிருக்க வேண்டும்
5. லேவி 8 : 6,9 – பரிசுத்த வஸ்திரத்தோடு இருக்க வேண்டும்

**குறிப்புகள்**

# 11. உதடுகள் அறிவை காக்க வேண்டும்!

(மல்கியா 2 : 7)

**நாம் யாவரும் ஆசாரியர்களே** – வெளி 1 : 6

1. ஏசாயா 6 : 5 – அசுத்த உதடுகள்

2. யாக் 1 : 19 – பொறுமையாய் பேசுகிற உதடு

3. நீதி 12 : 22 – பொய் உதடு

4. நீதி 12 : 19 – சத்திய உதடுகள்

5. உன் 4 : 11 – தேன் சிந்தும் உதடுகள்

(தேன் – வசனம், சங்கீதம் 19 : 10)

**குறிப்புகள்**



# 12. அப்போஸ்தலனாகிய அந்திரேயா!

(மத் 10 : 2)

**அந்திரேயா தைரியசாலி :**

1. தியாகமுள்ள அந்திரேயே
   a. யோவான் 1 : 40 – தான் பின்பற்றி வந்த யோவானை விட்டு விட்டுச் சென்றான்.
   b. வலைகளை விட்டு சென்றான் (மத் 4 : 19,20)
2. சாட்சி பகரும் அந்திரேயா (யோவான் 1 : 41)
3. ஆத்துமா ஆதாயகனாகிய அந்திரேயா (யோவான் 1 : 42)
4. கரிசனையுள்ள அந்திரேயே
   a. அப்பம் வைத்த பையனை அறிந்திருந்தான் (யோ. 6 : 8,9)
   b. கிரேக்கர்கள் வந்தபோது அதை இயேசுவுக்கு அறிவித்தான். (யோ. 12 : 22)
5. தாகமுள்ள அந்திரேயா (மாற்கு 13 : 3)
   இயேசுவின் வருகையை குறித்து ஆவலால் நிறைந்திருந்தான்.

**குறிப்புகள்**

# 13. கிருபையினால் முடிசூட்டுகிறார்....

(சங்கீதம் 103 : 4–6)

**முடிசூட்டுதலினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்:**

1. அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து
   (ஆத்துமாவில் விடுதலை எபேசியர் 2 : 7)
2. நோய்களையெல்லாம் குணமாக்கி... (சரீரத்தில் விடுதலை)
3. பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு....
   (ஆவியில் விடுதலை)

# 14. கிருபையோடு வருபவைகள்!

(ஏசாயா 54 : 8)

**கிருபையோடு இரக்கம் வருவது போல் கிருபையோடு இணைந்து வரும் ஆசிர்வாதங்கள் :**

1. கிருபையும் நன்மையும் (சங்கீதம் 23 : 6)
   (உலக ஆசீர்வாதங்கள்)
2. கிருபையும் சத்தியமும் (சங்கீதம் 25 : 10)
   (வசன வெளிப்பாடு)
3. கிருபையும் வரங்களும் (ரோமர் 11 : 29)
   (ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்)
4. கிருபையும் மகிமையும் (சங்கீதம் 84 : 11)
   (உயர்வு)
5. கிருபையும் நீதியும் (சங்கீதம் 116 : 5)
   (நியாயம் கிடைக்கும்)



# 15. இனி சாபமிராது!

(வெளி 22 : 3)

**சாபங்கள் வருகிற விதம் :**

1. மனுஷரிடத்திலிருந்து,

   a. பெற்றோரிடமிருந்து யாக்கோபு ரூபனை சபித்தான் (ஆதி 49 : 4)

   நோவா காமை சபித்தான் (ஆதி 9 : 25)

   b. ஊழியரிடமிருந்து

   எலிசா தன்னை பரிகாசம் பண்ணின பிள்ளைகளை சபித்தான் (II இராஜா 2 : 24)

2. வாயின் வார்த்தைகளினால் (பிரசங்கி 5 : 6)
3. தேவன் தரும் சாபம்

   a. சரியில்லாத காணிக்கை (மல் 1 : 14)

   b. கர்த்தருடைய வார்த்தையை சிந்தியாதவர்கள் (மல் 2 : 2)

   c. கர்த்தரின் பங்கை வஞ்சிப்பவர்கள் (மல் 3 : 9,10)

**சாபங்கள் நீங்கும் வழிகள் :**

கலாத்தியர் 3 : 13

இந்த வசனத்தை அறிக்கை செய்து, விசுவாசிக்க வேண்டும்.

**குறிப்புகள்**

# 16. நான் உன்னை உயர்த்துவேன் !

(சங் : 37–34)

1. துக்கிப்பவர்களை உயர்த்துகிறார்
   (யோபு 2 : 13, யோபு 6 : 3)
2. தெரிந்து கொள்ளப்பட்டவர்களை உயர்த்துகிறார்
   (சங். 89 : 19,20) (II சாமு 22 : 49)
3. சாந்த குணமுள்ளவர்களை உயர்த்துகிறார் (சங் 147 : 6)
4. எளிமையானவர்களை உயர்த்துகிறார் (I சாமு 2 : 8)
5. தாழ்த்துகிறவர்களை உயர்த்துகிறார் (மத். 23 : 12)

# 17. கர்த்தரின் கரம் !

(I நாளா 4 : 10)

1. தப்புவிக்கும் கரம் (எஸ். 8 : 35)
2. மேன்மைப்படுத்தும் கரம் (I நாளா. 29 : 12)
3. போஷிக்கும் கரம் (சங். 145 : 16)
4. ஆத்துமாக்களை திருப்பும் கரம் (அப். 11 : 21)
5. இளைப்பாறுதல் தரும் கரம் (ஏசா. 51 : 16)

| குறிப்புகள் |
| --- |
| |



# 18. நான் உன்னோடே இருந்து.....

(ஆதி 26 : 24)

**அவர் நம்மோடு இருந்தால்!?**

1. விடுவிப்பார் (எரே. 30 : 11)
2. ஜெயம் கொடுப்பார் (எண். 10 : 9)
3. சோதனையில் தப்புவிப்பார் (எசா. 43 : 2)
   (துணை வசனம் யோசு 1 : 5)

# 19. நீர் என்னை ஆசீர்வதியும் !

(ஆதி 32 : 26)

**எங்கே ஆசீர்வாதம் வரும்?**

1. உடன்படிக்கைப் பெட்டி உள்ள இடத்தில் – II சாமு6 : 11
2. ஊழியரின் சொல் கேட்கும் இடத்தில் – I இரா. 17 : 15
3. ஒருமனமாய் உள்ள சகோதரரிடத்தில் – சங். 133 : 3
4. தசமபாகம் கொடுக்கும் இடத்தில் – மல். 3 : 10
5. நீதி செய்கிறவன் தலையின் மேல் – நீதி. 10 : 6

| குறிப்புகள் |
| --- |
| |

# 20. யேகோவா மெக்காதிஸ்!

(லேவி 20 : 8)

**பரிசுத்தமாக்கும் கர்த்தர்!**

1. இரத்தத்தினால் பரிசுத்தமாக்குகிறார் – I யோ 1 : 7
2. சத்தியத்தினால் பரிசுத்தமாக்குகிறார் – யோ 17 : 17
3. பரி. ஆவியினால் பரிசுத்தமாக்குகிறார் –I கொரி 6 : 11
4. தெய்வீக தொடுகையினால் பரிசுத்தமாக்குகிறார் – எசா 6 : 6
5. ஆலோசனை அளித்து பரிசுத்தமாக்குகிறார்– யாத் 3:5

# 21.கர்த்தாவே! உமது வலது கரம்.

(எசா 41 : 10)

**அவரது கரம் வல்லமையுள்ளது.** உபா.5 : 15

1. தாங்கும் வலது கரம் (சங் 18 : 35)
2. பகைவனை நொருக்கும் வலது கரம் (யாத் 15 : 6)
3. ஊழியரை சுமக்கும் வலது கரம் (வெளி 1 : 16)
4. ஆலோசனை தரும் வலது கரம் (உபா 33 : 2)
5. நீதி செய்யும் வலது கரம் (சங். 48 : 10)

**குறிப்புகள்**



# 22. இவ்விதமாய் அற்புதம்!

(யோ 2 : 11)

**அற்புதம் எப்பொழுது வரும்?**

1. அவரை கனப்படுத்தும் பொழுது (அழைக்கப்பட்டிருந்தால்) வசனம் 2
2. அவரின் வேளைக்காக காத்திருக்கும் பொழுது, வசனம் 4
3. அவரின் வார்த்தைக்கு கீழ்படியும் பொழுது, வசனம் 7
4. அவரை விசுவாசிக்க வேண்டும், வசனம் 8
5. தைரியமாய் கிரியை செய்ய வேண்டும், வசனம் 9

அழைத்த வீட்டார், ஆலோசனை தரும் மரியாள், அப்படியே செய்யும் வேலையாள் – இந்த மூன்று கூட்டங்களும் இயேசு அற்புதம் செய்ய தேவை.

# 23. ஸ்தோத்திர பலியிட்டால்!

(சங். 51 : 23)

1. எதிரி சிதறி ஓடுவான். – II நாளா 20 : 22
2. சிறையிருப்பு மாறும். – அப். 16 : 25
3. தடைகள் நீங்கும். – யோசு 6 : 20
4. சூழ்நிலை சாதகமாகும். – யோனா 2 : 9
5. குடும்ப பாதுகாப்பு பெருகும். – சங். 147 : 12–14

## 24. பட்சியைப் போல் காப்பார்!

(எசா. 31 : 5)

1. சுமந்து காப்பார் – உபா 32 : 11–13
2. மூடிக்காப்பார் (பாதுகாப்பு) – சங் 91 : 4
3. செட்டைகளில் மறைப்பார் (இளைப்பாறுதல்)– சங் 61:4

## 25. ஊழியருக்கு எதிராக வருபவை!

(எரே 1 : 19)

**உதாரணபுருஷன் : மோசே**

1. சாத்தான் (அதிகாரம்) – யாத் 1 : 16
2. மந்திரவாதிகள் – II தீமோ 3 : 8 (எண் 23 : 21)
3. சொந்த ஜனம் – எண் 12 : 1
4. உடன் ஊழியர்கள் – எண் 16 : 1
5. சபையார் – எண் 14 : 2

ஆனாலும்..... எசா 54 : 17

**குறிப்புகள்**



## 26.நீங்கள் ராஜரீக ஆசாரியர்கள்!

(1 பேதுரு 2 : 9)

**ஆசாரியருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் :**

1. வேறு பிரிக்கப்பட்டவன் – யாத். 28 : 1
2. பரிசுத்த(ம்) வஸ்திரம் – யாத். 28 : 2
3. தூபம் காட்டுகிறவன் – யாத். 30 : 7
4. அறிவாய் பேசவேண்டும் – மல்கியா. 2 : 7

## 27. யோசுவாவை எதிர்க்க ஒருமனப்பட்டவர்கள்!

(யோசுவா 9 : 12)

இந்த ஆறு இராஜாக்களும் கிபியோனின் குடிகளும் நம்மை வீழ்த்த நினைக்கும் ஏழு பொல்லாத ஆவிகள், அவைகளை ஜெயிக்க வேண்டியது அவசியம்.

1. ஏத்தியர் – பயப்படுகிறவர்கள் – வெளி 28 : 1
2. எமோரியர் – கசப்பானவர்கள் – எபி 12 : 13
3. கானானியர் – எதிர்த்து நிற்கிறவர்கள் – அப். 7 : 51
4. பெரிசியர் – வெதுவெதுப்பானவர்கள் – வெளி 3 : 16
5. ஏவியர் – புளிப்பானவர்கள் – I கொரி 5 : 8
6. எபுசியர் – சாபம் – எபி. 12 : 14
7. கிபியோனியர் – வஞ்சிக்கிறவர்கள் – மல்கி 3 : 8

# 28. பிரியமான பிலேமோன்

# (முழு அதிகாரம்)

**(பிலேமோனின் சிறப்புத் தன்மைகள்)**

1. அன்பு – வசனம் 4
2. விசுவாசம் – வசனம் 4
3. ஐக்கியம் – வசனம் 6
4. நன்மை – வசனம் 16
5. பரிசுத்தவான்களை இளைப்பாறச் செய்தல் – வசனம் 7

# 29. ஓடிப்போன ஒநேசிமு

**(பிலேமோன் முழு அதிகாரம்)**

1. ஊழியரின் உள்ளம் போன்றவன் – வசனம் 12
2. பிரயோஜனமுள்ளவன் – வசனம் 11
3. ஊழியம் செய்பவன் – வசனம் 13
4. பிரியமான சகோதரன் – வசனம் 16
5. உண்மையுள்ளவன் – கொலோசெயர் 4 : 9

**குறிப்புகள்**



# 30. வாருங்கள்! வாருங்கள்!!

(மத்தேயு 25 : 34)

**வந்தால்**

1. இளைப்பாறுதல் – மத். 11 : 28
2. பரிசுத்த ஆவி – யோவான். 7 : 37, ஏசா. 55 : 1
3. ஊழியம் – மத். 1 : 17
4. கிருபை – ஏசா. 55 : 3
5. ஆசிர்வாதம் – மல்கியா. 3 : 10

   கூடுதலாக சங். 122 : 1, 100 : 2

# 31. கிருபை! கிருபை!!

(லூக் 1 : 28)

**யாருக்கு எப்போது**

1. நம்பிக்கையுள்ளவனுக்கு : சங். 32 : 10
2. தாழ்மையுள்ளவனுக்கு : நீதி. 3 : 34
3. அவருக்கு பயப்படுவோருக்கு : சங். 103 : 11
4. நல்லோசனை செய்வோருக்கு : நீதி. 14 : 22
5. ஸ்தோத்தரிப்போருக்கு : 2 கொரி 4 : 15

**குறிப்புகள்**

# 32. இதோ நுகங்கள் முறிகிறது!

(எசேக். 34 : 27)

**நுகங்கள் முறியும் காலம் இதுவே** – ஆதி. 27:40

**நுகங்கள் எப்படி முறியும்?**

1. பிதாவாகிய தேவனின் வல்லமையால் – லேவி 26 : 13
2. குமாரனாகிய தேவனின் பிறப்பால் – பிரசன்னத்தால் – ஏசா. 9 : 4–6
3. பரிசுத்த ஆவியாகிய தேவனின் அபிஷேகத்தால். – ஏசா 10 : 27

**குறிப்பு :**

தமிழ் வேதாகமத்தில் அபிஷேகத்தின் நுகம் என்று எழுதப்பட்டுள்ளது. அபிஷேகத்தினால் என்பதே சரியான மொழிபெயர்ப்பு.

# 33. 91 ஆம் சங்கீதத்தில்!

1. விடுவிக்கிற கர்த்தர் – வசனம் 14
2. உயர்த்துகிற கர்த்தர் – வசனம் 14
3. பதிலளிக்கும் கர்த்தர் – வசனம் 15
4. உடனிருக்கும் கர்த்தர் – வசனம் 15
5. தப்புவிக்கும் கர்த்தர் – வசனம் 15
6. கனப்படுத்தும் கர்த்தர் – வசனம் 15
7. திருப்தியாக்கும் கர்த்தர் – வசனம் 16

**குறிப்புகள்**



# 34. என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்!

(சங். 23 : 5)

**பழைய ஏற்பாட்டில் சிறப்பு அபிஷேகம் பெற்ற மூன்று கூட்டத்தினர்.**

அ) ஆசாரிய அபிஷேகம் (சங். 133 : 2)

உதாரணம் : ஆரோன்

ஆசாரிய அபிஷேகம் எதற்கு?

நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்கு.

ஆ) இராஜ அபிஷேகம்

உதாரணம் : சவுல், தாவீது (I சாமு 9 : 16, 16 : 12)

இராஜ அபிஷேகம் எதற்கு?

கழுதையை தேடவோ, ஆட்டை மேய்க்கவோ அல்ல.

ஆளுகை செய்யவும், அதிகாரத்தை பயன்படுத்தவுமே.

இ) தீர்க்கதரிசன அபிஷேகம்.

உதாரணம் : எலிசா (1 இராஜா 19 : 16)

தீர்க்க தரிசன அபிஷேகம் எதற்கு?

தேவனுடைய வார்த்தையை சொல்லுவதற்கு.

தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதற்கு.

நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாமே ஒரு தீர்க்கதரிசி தான். (ஆதி. 20 : 7)

ஆகவே,

நீங்கள் பரிசுத்தமாய் வாழ – ஆசாரியராய்
நீங்கள் ஆளுகை செய்ய – இராஜாவாய்
நீங்கள் வேதத்தை விளம்ப – தீர்க்கதரிசியாய்
மும்மடங்கு அபிஷேகம் பெற்று உள்ளீர்கள்.

# 35. சிலநேரங்களில் இதுவும் தேவை தான்.

(பவுலின் வாழ்விலிருந்து)

1. பவுல் சினங்கொண்டு – அப். 16 : 18

ஆவிகளை பகுத்தறிய வேண்டும். இனங்கண்டு சினங்கொண்டு கடிந்து கொள்ள வேண்டும்.

2. பவுல் வைராக்கியம் கொண்டு – அப். 18 : 5

உபதேசத்தின் மேல், கிறிஸ்துவின் மேல் வைராக்கியம் நமக்கு தேவை.

3. பவுல் தைரியங் கொண்டு தர்க்கித்தான் – அப். 9 : 29

சத்தியத்திற்காக வாதாட அஞ்சக்கூடாது.

கொஞ்சம் சினம், கொஞ்சம் வைராக்கியம், கொஞ்சம் தர்க்கம் நமக்கு தேவை.

**குறிப்புகள்**



# 36. உயிர்த்தெழுந்த இயேசு தந்தது.

(யோவான் 20 : 19–23)

1. தேவ சமூகம் (நின்று) - Presence - யோவான் 20 : 19
2. சமாதானம் - Peace - யோவான் 20 : 19
3. சந்தோஷம் - Pleasure - யோவான் 20 : 20
4. பரிசுத்தஆவி - Power - யோவான் 20 : 22
5. சிலாக்கியம் - Privilege - யோவான் 20 : 23

# 37. கர்த்தரை கண்ட அன்னாள்!

(லூக் 2 : 36)

முதலாம் வருகையில் அன்னாள் கிறிஸ்துவை கண்டதுபோல் நாமும் அவரை இரண்டாம் வருகையில் முகமுகமாய் தரிசிப்போம். நிலையோ, வயதோ (விதவை, வயதானவள்) அவளை பின்னடையச் செய்யவில்லை.

**அன்னாளுக்கு இருந்த ஐந்து குணாதிசயங்கள்.**

1. தேவாலயத்தை விட்டு நீங்காமல் – லூக். 2 : 37
2. உபவாசித்து – லூக். 2 : 37
3. ஜெபம் பண்ணி – லூக். 2 : 37
4. ஆராதனை செய்து – லூக். 2 : 37
5. இயேசுவைக் குறித்து பேசினாள் – லூக் 2 : 38

**குறிப்புகள்**

# 38. கிழக்குத் திசை சாஸ்திரிகள்!

(மத்தேயு 2 : 1–12)

1. ஆராய்ந்ததினால் அறிந்து கொண்டு வந்தார்கள் – மத். 2 : 2
2. ஆவலுடன் ஆராதிக்க வந்தார்கள் (பணிந்து கொள்ள) – மத். 2 : 2
3. ஆனந்தமாய் அள்ளி கொடுத்தார்கள் – மத். 2 : 11
4. ஆண்டவரின் ஆலோசனை பெற்று திரும்பினார்கள் – மத். 2 : 12
5. ஆட்சியாளர்களின் ஆணையை அலட்சியம் பண்ணினார்கள் – மத். 2 : 12

# 39. சர்வ வல்லவர்!

(மாற்கு 2 : 2–12)

1. போதிக்கும் கிறிஸ்து – மாற்கு 2 : 2
2. விசுவாசத்தை கனப்படுத்துகிறவர் – மாற்கு 2 : 5
3. பாவங்களை மன்னிக்கிறவர் – மாற்கு 2 : 5
4. சிந்தைகளை அறிகிறவர் – மாற்கு 2 : 8
5. வியாதிகளை சுகமாக்குகிறவர் – மாற்கு 2 : 11

**குறிப்புகள்**



# 40. பிரியமான காயுவே!

(III யோவான் 1 முதல் 14 வரை)

1. பிரியமானவன் – வசனம் 2
2. சத்தியத்தில் நடக்கிறவன் – வசனம் 3
3. உண்மையுள்ளவன் – வசனம் 3
4. அன்புள்ளவன் – வசனம் 6
5. சத்தியத்தில் உடன் வேலையான் – வசனம் 8

# 41. நமக்கு எட்டாத பெரிய காரியங்கள்.

(எரேமியா 33ஆம் அதிகாரம்)

1. நான் ஆரோக்கியம் வரப்பண்ணுவேன் (வசனம் 6)
   - அ. சௌவுக்கியம்
   - ஆ. சமாதானம்
   - இ. குணமாகுதல்
   - ஈ. பூரணசத்தியம்
2. நான் சிறையிருப்பைத் திருப்பி முன்போல் கட்டுவேன் (வசனம் 7)
   - அ. முன்பு இருந்ததுபோல
   - ஆ. அக்கிரமத்துக்கு நீங்கலாக்கி
   - இ. சுத்திகரித்து
3. நான் சொன்ன நல்வார்த்தைகளை நிறைவேற்றுவேன். (வசனம் 14)
4. நான் வர்த்திக்கப் பண்ணுவேன் (வசனம் 22)
   - அ. ஊழியம் செய்கிறவர்கள்

# 42. சீ(ே)மான் பேதுரு !

(யோவான் 21 : 17)

1. ஸ்திரிகளும் முந்தி வந்த யோவானும் அஞ்சி வெளியே நின்றார்கள். பேதுருவோ கல்லறையின் உள்ளே சென்றான். – கிறிஸ்துவுக்காய் துணிவு.

   (யோவான் 20 : 6)

2. யோவானோ அது கர்த்தர் என்றான். சீமோனோ பாய்ந்து கடலில் குதித்து வந்தான். – கிறிஸ்துவுக்காய் கனிவு (யோவான் 21 : 7)

3. சீஷர்களை பார்த்து மீன்களை கொண்டு வாருங்கள் என்று சொன்னார். அவர்கள் சும்மாயிருந்து விட்டார்கள். 153 மீன்கள் உள்ள வலையை பேதுரு தனியே இழுத்து வந்தான். – கிறிஸ்துவுக்காய் உழைப்பு (யோ. 21 : 11)

4. இயேசு பேதுருவுக்கு எத்தனையோ சிலாக்கியங்களை கொடுத்தார். அவனோ யோவான் மேல் அக்கறையுள்ளவனாக இருந்தான். – ஆத்துமாக்களுக்காய் பரிவு (யோ. 21 : 21)

5. மரணத்திலும் அவரை பின்பற்றி அவருடைய வார்த்தையின்படியே அவருக்கு பின் சென்றான். – கிறிஸ்துவுக்காய் அர்ப்பணிப்பு (யோ. 21 : 19)



# 43. ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே ?

(யோபு 28 : 12)

**ஞானத்தைப் பெற வழிகள் :**

1. கர்த்தருக்கு பயப்படு – யோபு 28 : 28 (நீதி 1 : 7)
2. வசனத்தைக் கைக்கொள் – சங் 119 : 98 (சங் 119 : 100) (கொலே 3 : 16) (சங் 19 : 7)
3. தாழ்மையில் சிந்தைகொள் – நீதி 11 : 2
4. ஆலோசனையை ஏற்றுக்கொள் – நீதி 13 : 10 (நீதி 15 : 32)
5. கிறிஸ்துவே ஞானம் தருகிறவர் – I கொரி 1 : 24 (I கொரி 1 : 31)
6. ஆவியானவர் ஞானம் அருள்வார் – ஏசா 11 : 2 (I கொரி 12 : 8)
7. ஜெபிக்கிறவனுக்கு ஞானம் கிட்டும் – யாக். 1 : 5 (ஞானம் பரத்திலிருந்து வரும் – யாக். 3 : 17)

**குறிப்புகள்**

# 44. முத்தான முதலாம் சங்கீதம்!

**இந்த சங்கீதம் தரும் ஆசீர்வாதங்கள் :**

1. நாம் பாக்கியவான்கள்.
2. நாம் கனி தருபவர்கள்.
3. நாம் இலையுதிராதவர்கள்.
4. நாம் காரியசித்தியுள்ளவர்கள்.

(நாம் செய்வதெல்லாம் வாய்க்கும்)

இந்த சங்கீதம் சுட்டிக்காட்டும் இரண்டு கூட்டம்.

1. துன்மார்க்கன், 2. நீதிமான்கள்.

**துன்மார்க்கன் யார்?**

1. சிறுமைப்பட்டவனை துன்பப்படுத்துகிறவன் – சங். 10:2
2. நீதிமான்களை பார்த்து பற்கடிக்கிறவன் – சங். 37 : 12
3. நீதிமான்களை அசட்டை செய்கிறவன் – சங். 10 : 3
4. கடன் வாங்கி திருப்பி தராதவன் – சங். 37 : 21
5. வேதத்தை விட்டு விலகுகிறவன் – சங். 119 : 53

**நீதிமான் யார்?**

1. இரட்சிக்கப்பட்டவன் – சங். 138 : 15
2. இராஜ பாதையில் – நீதி 15 : 19
   (நேர்மையான வழியில் செல்பவன்)
3. உதாரமாய் கொடுப்பவன் – நீதி. 21 : 26
4. மற்றவர்களை அவமானப்படுத்தாதவன் – மத். 1 : 19
5. ஊக்கமாய் ஜெபிப்பவன் – யாக். 5 : 16

**குறிப்புகள்**



# 45. கர்த்தர் நமக்கு கேடகமானவர்.

(ஆதி. 15 : 1)

**அவர் நமக்கு கேடகமானால்......**

1. காருண்யம் உண்டு – சங். 5 : 12
2. இரட்சிப்பு உண்டு – II சாமு 22 : 36
3. விசுவாசம் உண்டு – எபே. 6 : 16
4. சத்தியம் உண்டு – சங். 91 : 4
5. ஞானமும் திரவியமும் உண்டு – பிர. 7 : 12

# 46. கர்த்தரில் பெலன் கொள்ளுங்கள்.

(சங். 84 : 5)

1. மகிழ்ச்சியாயிருப்பதே நமது பெலன் – நெகே. 8 : 10
2. பரிசுத்த ஆவியே நமது பெலன் – அப். 1 : 8
3. கர்த்தருக்குக் காத்திருப்பதே நமது பெலன் – ஏசா 40 : 31
4. அமரிக்கையும் நம்பிக்கையுமே நமது பெலன் – ஏசா 30 : 15

**குறிப்புகள்**

# 47. நீதியின் பலிகளைச் செலுத்துங்கள்.

(சங். 4 : 5)

1. விசுவாசமாகிய பலி – பிலி. 2 : 7
2. ஆனந்த பலி – சங். 27 : 6
3. ஸ்தோத்திர பலி – எபி. 13 : 15

# 48. ஆவியானவர் என்ன செய்கிறார் ?

(ரோமர் 8ஆம் அதிகாரம்)

1. நம்மை குறித்து சாட்சிக்கொடுக்கிறார் – வசனம் 16
2. பெலவீனங்களில் உதவி செய்கிறார் – வசனம் 26
3. நமக்காக வேண்டுதல் செய்கிறார் – வசனம் 26
4. நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிக்கிறார் – வசனம் 11

**குறிப்புகள்**



# 49. கண்ணி தெறித்தது!!

(சங். 124 : 7)

வேடனுடைய கண்ணி – சங். 91 : 3

இது சிக்க வைக்கும்.

மரண கண்ணிகள் – நீதி 13 : 16

சாக வைக்கும்.

**கண்ணிகள் எவை?**

1. மனுஷருக்கு பயப்படுவது கண்ணி – நீதி. 29 : 25
2. பரிசுத்தமானதை விழுங்குவது கண்ணி – நீதி.20 : 25 (லேவி 27 : 30)

   தசமபாகம் – பரிசுத்தம் – லேவி 27 : 30

   ஓய்வுநாள் – பரிசுத்தம் – லேவி 23 : 3
3. நேர்ந்து கொண்டபின் யோசிப்பது கண்ணி– நீதி. 20:25 (பிரசங்கி 5 : 5)
4. அந்நிய தேவர்களைச் சேவிப்பது கண்ணி – உபா.7: 16 (நியா 3 : 2)

   15. ஐசுவரியவானாக விரும்புவது கண்ணி– Iதீமோ 6:9

**கண்ணிக்கு தப்பும் வழி எது?**

1. ஞானியின் போதகம் – நீதி. 13 : 14
2. தேவனுக்கு பயப்படுதல் – நீதி 14 : 27
3. தன் ஆத்துமாவை காத்துக்கொள்ளுகிறவன் – நீதி 22 : 5

# 50. உன் ஊழியத்தை நிறைவேற்று !

(II தீமோத்தேயு 4 : 5)

ஊழியங்களில் வித்தியாசம் உண்டு – I கொரி 12 : 5

விசுவாசிகள் செய்யத்தக்க சில குறிப்பிட்ட ஊழியங்கள் உண்டு. அதை மட்டும் நீங்கள் நிறைவேற்றுங்கள்.

**நீங்கள் செய்யத்தக்க ஊழியங்கள் :**

1. அழைத்தவரின் புண்ணியத்தை அறிவியுங்கள். – I பேது 2 : 9 (சாட்சியாயிருங்கள் அப். 1 : 8)
2. புத்தி சொல்லுங்கள் – எபி. 10 : 25
3. ஆஸ்திகளால் தாங்குங்கள் – லூாக். 8 : 3
4. பின்மாற்றக்காரர்களை திருப்புங்கள் – யாக். 5 : 20
5. சரீர உழைப்பினால் தாங்குங்கள் – ரோமர். 16 : 12 (சரீர பிரயாசம்)

**குறிப்புகள்**



# 51. அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா ?

(மாற்கு 6 : 45–53)

நமது வாழ்க்கை பயணத்தில் காற்று வீசலாம், அலைகள் மோதலாம், அமிழ்ந்து போவோமோ என்ற நிலை வரலாம். ஆனாலும் அவர் நம்மோடு இருக்கிறார்.

**அவர் எப்படிப்பட்டவர் ?**

1. நமது பாடு, வருத்தங்களை காண்கிறவர் – மாற். 6 : 45 (ஆதி. 16 : 13)
2. தீவிரித்து உதவி செய்ய வருகிறவர் – மாற். 6 : 48
3. நம்மோடு பேசி தைரியப்படுத்துகிறவர் – மாற். 6 : 50
4. அமைதிப்படுத்துகிறவர் – மாற். 6 : 51
5. பிரமிப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகிறவர் – மாற். 6 : 51

**குறிப்புகள்**

# 52. ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

(ஆதி. 5 : 22–24)

**ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட காரணம் :**

1. கற்றுக்கொள்ளுகிறவன் – ஆதி 5 : 22

   (ஏனோக்கு என்றால் கற்றுக்கொள்ளுகிறவன், பிரதிஷ்டையுள்ளவன்)

2. விசுவாசத்தினால் – எபி. 11 : 4
3. தேவனுக்குப் பிரியமானவன் – எபி. 11 : 5
4. நீதிமான் – எபி. 11 : 4
5. மேன்மையான காணிக்கை கொடுத்தவன் – எபி.11 : 4
6. சாட்சிப் பெற்றவன் – எபி. 11 : 5

   (தாவீது சாட்சிப் பெற்றான் – எபி. 13 : 22, தாவீது சாட்சியை காத்துக்கொண்டான் – எபி. 13 : 26)

7. வருகையை பிரசங்கித்தான் – யூதா 14.

**குறிப்புகள்**



# 53. கண்களை திறக்கிறவர்.

(ஏசாயா. 42 : 6)

1. ஆகாரின் கண்களை திறந்தார் – ஆதி 21 : 19

   (கைவிடப்பட்ட நிலையில் தேவ உதவியை காண்பதற்காக)

2. பிலேயாமின் கண்களை திறந்தார் – எண் 24 : 3,4

   (வழித்தவறின வேளையில் தேவ எச்சரிப்பைக் காண)

3. வேலைக்காரனின் கண்களை திறந்தார் –

   II இராஜா 6 : 17

   (பயந்து நடுங்கும்போது தேவ பாதுகாப்பை காண)

4. எதிராளிகளின் கண்களை திறந்தார் –

   II இராஜா 6 : 20

   (எதிரிகள் நமது கைக்குள் வந்துவிட்டதை அவர்கள் உணர)

# 54. கர்த்தரை கண்ட மனோவா.

(நியாயா. 13 : 22)

தேவன் மனோவாவுக்கு வெளிப்பட மனோவாவுக்குள் இருந்த நற்காரியங்கள் :

1. தேவ வார்த்தையில் நம்பிக்கையுள்ளவன் – நியா. 13:8
2. தேவனிடத்தில் ஜெபிக்கிறவன் – நியா. 13 : 8
3. தேவனை விசுவாசிக்கிறவன் – நியா. 13 : 12
4. தேவனுக்குக் கொடுக்கிறவன் – நியா. 13 : 15
5. தேவனை கனம்பண்ணுகிறவன் – நியா. 13 : 17

# 55. தேவன் நமக்கு அடைக்கலமானவர்.

(சங். 46)

ஆகையால்.....

ஜலம் கொந்தளிப்பது, பூமி நிலைமாறுவது ஆகியவை நமக்கு எதிராக வரும் இயற்கை சீற்றங்கள்.

ஜாதிகள் கொந்தளித்து நமக்கு எதிராக எழும்பும் மனித சீற்றங்கள்.

ஆனாலும்.....

1. பயமில்லை – வசனம் 3
2. சந்தோஷமுண்டு – வசனம் 4
3. அசைக்கப்படுவதில்லை – வசனம் 5
4. சகாயம் உண்டு – வசனம் 5
5. யுத்தங்கள் இல்லை – வசனம் 9
6. நமக்கு எதிரான ஆயுதங்களில்லை – வசனம் 9

**குறிப்புகள்**



# 56. சிலுவையை சுற்றி நின்றவர்கள்

(யோவான் 19 : 25)

1. மரியாள் – வசனம் 25

   பாக்கியம் பெற்றதின் நிமித்தம் ஓடிப்போக வில்லை.
2. கிலேயாப்பா மரியாள் – வசனம் 25

   தன் பிள்ளைகளின் தலைவன் என்ற உறவு நிமித்தம் ஓடிப்போகவில்லை.
3. மகதலேனா மரியாள் – வசனம் 25

   விடுதலை பெற்றதின் நிமித்தம் ஓடிப்போகவில்லை.
4. யோவான் – வசனம் 26

   அன்பை பெற்றதின் நிமித்தம் ஓடிப்போகவில்லை.

# 57. கோலியாத்தை ஜெயிப்போம்!

(1 சாமு 17 : 40–51)

**தாவீது வெற்றி பெற காரணங்கள்.**

1. கர்த்தரை முன் வைத்தான் – 17–45

   கர்த்தரை மகிமைப்படுத்த ஆவல் கொண்டான்.

   கர்த்தரின் நாமத்தை உயர்த்தினான்.
2. கர்த்தரை விசுவாசித்தான் – 17 : 46

   இன்றைய தினம்

   கொன்று
3. விசுவாச அறிக்கை – 17 : 47

   உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்.

# 58. 133ஆம் சங்கீதம்

## இந்த சங்கீதத்தில் உள்ள ஆசீர்வாதங்கள்

1. நன்மை (லாபம்) – வசனம் 1
2. இன்பம் (மனமகிழ்ச்சி) – வசனம் 1
3. அபிஷேகம் (தைலம்) – வசனம் 2

   அபிஷேக தைலம் பரிசுத்தம். யாத். 30 : 30,31
4. ஆசீர்வாதம், பொருளாதார செழுமை, பெராக்கா – எபிரேய வார்த்தை – வசனம் 3
5. ஜீவன் (ஆவிக்குரிய செழுமை) – வசனம் 3

# 59. யார்? யார்? எது? எது?

(ரோமர் 8 : 31–39)

1. நமக்கு விரோதமாய் நிற்பவன் – வசனம் 31 எரே. 1 : 19
2. நம்மை குற்றம் சாட்டுகிறவர் – வசனம் 33 ஏசாயா 54 : 17
3. கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிப்பவன் – வசனம் 36 ரோமர் 5 : 5
4. ஆக்கினைக் குள்ளாக தீர்க்கிறவன் – வசனம் 34 வெளி. 12 : 16



# 60. ஆறுதலின் மகனாகிய பர்னபா.

(அப். 4 : 36)

சீப்புரு தீவான்

லேவியன்

இவனது மறுபெயர் – யோசே

சிறப்பு பெயர் பர்னபா (ஆறுதலின் மகன்)

**இவனது நற்பண்புகள் :**

1. தனக்கு உண்டானவைகளை கர்த்தருக்கு உண்மையாய் கொடுத்தான். – அப். 4 : 37
2. நல்லவன் – ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவன். – அப். 11 : 24
3. இரட்சிக்கப்பட்டவர்களை பாரத்துடன் தேடிப்பிடிப்பவன் – அப். 11 : 25
4. தைரியமாய் வசனத்தை சொல்லுபவன்.

   அப். 14 : 3 – 13 : 46
5. பிராணனையும் ஒப்புக்கொடுக்க துணிந்த பிரியமானவன். 15 : 25

**குறிப்புகள்**

## பிரசங்கிப்போர் கவனத்திற்கு

உங்கள் சுய முன்னேற்றத்திற்கு கீழ்க்கண்ட எமது புத்தகங்களை வாங்கி வாசியுங்கள்.

1. வளமான பிரசங்கி.
2. பிரசங்கிப்போருக்கு என் ஆலோசனைகள்.
3. ஆத்தும ஆதாயகருக்கு என் ஆலோசனைகள்.
4. தேனும் பாலும் (துணுக்குகள்)
5. தெளிவூட்டும் தேன்துளிகள் (துணுக்குகள்)
6. பயனுள்ள பிரசங்க குறிப்புகள்.
7. சமயத்திற்கேற்ற பிரசங்க குறிப்புகள்.



## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**